டிஎன்பிஎஸ்சி குரூப்-2 மாதிரி வினாவிடை பக்கம் 14

மழைநீர் தடையின்றி செல்ல பாலங்கள் சீரமைப்பு மும்முரம் பக்கம் 15


## பெரம்பலூர்

# சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம்

பெரம்பலூர், ஆக. 25: சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், திண்டுக்கல், காந்தி கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போதி இண்டர்நேஷனல் ஜெர்னல் ரிசர்ச் ஹீமானிட்டீஸ் அண்ட் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் என்ற மூன்று நிறுவனங்களும் இணைந்து சர்வதேச அளவில் பல்துறை ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நேற்று கலை மற்றும் சமூக அறிவியலில் புதுமையான சிக்கல்கள் மற்றும் அணுகுமுறைகள் என்னும் தலைப்பில் நடைபெற்றது. தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் சீனிவாசன் தலைமை வகித்து விழாவை துவக்கி வைத்தார். இயக்குநர் ராஜபூபதி முன்னிலை வகித்தார்.




திண்டுக்கல் காந்திகிராம் காந்திகிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் பேராசிரியர் முரளிதரன் தொடக்க உரை நிகழ்த்தினார். சென்னை தன்னாட்சி பெற்ற ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி ஸ்டெல்லா மேரி துவக்கு உரையாற்றினார்.

இக்கருத்தரங்கின் கருத்தரங்க உரை சீனா குவாங்க்ஸி மினே பல்கலைக்கழகம் உதவிப் பேராசிரியர் ஜெயராஜ் சோனெ சிங்காரம் சிறப்புரையாற்றினார். முன்னதாக சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் வெற்றிவேலன், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின் கூடுதல் பதிவாளர் முனைவர் மு.இளங்கோவன், திண்டுக்கல் காந்திகிராம் காந்திகிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் வெளிநாட்டு ஆங்கில மொழிகளின் பள்ளி முதன்மையர் இணைப் பேராசிரியர் பாலசுந்தரி, பதிப்பாசிரியர் நிர்வாக ஆசிரியர் பாலகிருஷ்ணன், பேரா.வ.சந்திரசௌத்ரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். தடயவியல் துறைத்தலைவர் முனைவர் செந்தில்குமார் நன்றி வழங்கினார்.

மாலையில் கருத்தரங்கின் நிறைவு விழா நடந்தது. கருத்தரங்கம் பற்றிய அறிக்கையை உயிர் தொழில்நுட்பவியல், துறைத்தலைவர் முனைவர் இரா.ரம்யா சமர்பித்தார். நிறைவு விழா உரையை மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆங்கில ஆராய்ச்சித்துறை முன்னாள் இணைப்பேராசிரியர் ஜான் சேகர் வழங்கினார்.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் திண்டுக்கல் காந்தி கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மதுரை காமராசர் பல்கலைக்கழகம். சீனா குவாங்க்ஸி மின்ஷீ பல்கலைக்கழகம். தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் புதுச்சேரி பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக்கழகம் சேலம் பெரியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் திருச்சி சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம் மதுரை ஸ்பீச் பாய்ண்ட் போன்ற பல்கலைக்கழகங்களிலும் இருந்தும் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் என 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து விருதுகள் வழங்கப்பட்டது.

Extract from the Newspaper: DINAKARAN, Perambalur Supplement, 25 August, 2024, Pg:13

Link: https://epaper.dinakaran.com/c/75710898